**செய்தி வெளியீடு எண்: 207** **நாள்: 24.03.2018**

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறங்களில் வசிக்கும் 2000 மண்பாண்ட தொழிலாளர்களுக்கு முதற்கட்டமாக ரூ.4.08 கோடி செலவில் விலையில்லா மின்விசைச் சக்கரம் வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று (23.03.2018) கலைவாணர் அரங்கில் அமைக்கப்பட்டுள்ள கதர் கிராமத் தொழில் வாரிய கண்காட்சி அரங்கில் துவக்கி வைக்கப்பட்டது. மேலும் வாரியத்தால் சிவப்பு சந்தன நறுமணத்தில் தயார் செய்யப்பட்ட “ பொய்கை” மற்றும் “ லாவண்டர்” நறுமணத்தில் தயார் செய்யப்பட்ட “சுகந்தம்” ஆகிய குளியல் சோப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. க. பாஸ்கரன் அவர்கள், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கே. பணிந்திரரெட்டி, இ.ஆ.ப. அவர்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரிய தலைமைச் செயல் அலுவலர் திரு.சி. நடராசன், இ.ஆ.ப., அவர்கள் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**